**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலன்– 2013–14 ஆம் நிதியாண்டில் மாற்றுத் திறனாளிகள் சுயவேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் மத்திய அரசின் பாரதப் பிரதமரின் சுயவேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMRGP)– மாற்றுத் திறனாளிகள் செலுத்த வேண்டிய 5% பங்குத் தொகையை அரசே ஏற்கும் திட்டமாக செயல்படுத்திட மற்றும் ரூ.5.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.13

நாள்:07–03–2014
விஜய, மாசி 23,
திருவள்ளுவர் ஆண்டு 2045

படிக்க:

1. அரசாணை(நிலை) எண்.122, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 21–12–2012.
2. முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் , ந.க.எண்.3511/மா.தி.ந.3.1/2013, நாள் 18.7.13.

-------

**<u>ஆணை:</u>**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 2012–13 ஆம் நிதியாண்டில், பாரத பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தில், மாற்றுத் திறனாளிகள் செலுத்த வேண்டிய 5% முதலீட்டாளர்கள் பங்கு தொகையை, தமிழக அரசு ஏற்று மாற்றுத் திறனாளிகளுக்கு மானியமாக வழங்கிடும் திட்டத்திற்கென, ரூ.5.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து, ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், 2013–14 ஆம் நிதியாண்டிற்கு, இத்திட்டத்தை செயல்படுத்த, திட்டத் தொடராணையும் மேலும் மாற்றுத் திறனாளிகள் செலுத்த வேண்டிய 5% முதலீட்டாளர்கள் பங்கு தொகையினை, தமிழக அரசே ஏற்று மாற்றுத் திறனாளிகளுக்கு மானியமாக வழங்கிட, தோராயமாக 50 பயனாளிகள் பயன் அடையும் வகையில் ரூ.5.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. முதன்மைச் செயலாளர்/ மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை கவனமாக பரிசீலத்த பின்னர் அதனை ஏற்று, 2013–14 ஆம் நிதியாண்டில், பாரத பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தில், மாற்றுத் திறனாளிகள் செலுத்த வேண்டிய 5% முதலீட்டாளர்கள் பங்கு தொகையை தமிழக அரசே ஏற்று, மாற்றுத் திறனாளிகளுக்கு மானியமாக வழங்கிட இத்திட்டத்திற்கென ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் மேலும், மேற்காணும் நிதியை பெற்று வழங்கிட முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதியளித்தும் அரசு ஆணையிடுகிறது.

4. முன்பக்கம் பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

“ 2235– சமூக பாதுகாப்பும் நலனும்–02. சமூக நலன் –101– மாற்றுத் திறனாளிகள் நலன்–பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் II– மாநிலத் திட்டம் –“ML” பிரதம மந்திரியின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் மாற்றுத் திறனாளிகள் சுயவேலை வாய்ப்புப் பெற உதவித் தொகை –09. உதவித் தொகை–03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை”.
(த.தொ. கு. 2235–02–101–ML–0932)

5. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.11276/நிதி(சந)/2014, நாள் 04.03.2014 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5/35.தலைமைக் கணக்காயர், சென்னை–18/35
தலைமைக் கணக்காயர், சென்னை– 18/35 (பெயரில்)

**<u>நகல்:–</u>**
நிதி (சந) துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.